## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

**முன்னிலை:**–திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 4ம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.54/2023**
**CNR No. TNED13-003349-2023**

அரசுக்காக, காவல் ஆய்வாளர், சிவகிரி காவல் நிலையம்,
(குற்ற எண்.82/2023) – குற்ற முறையீட்டாளர்

//எதிராக//

சக்திவேல், வயது 55/2023, த/பெ.முத்துசாமி,
53(1) ராசாத்தாவலசு, முத்தூர் அஞ்சல்,
காங்கேயம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம். – எதிரி

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 22.05.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 22.05.2023 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 10.06.2023 | காவல்நிலைய பிணையில் சென்ற நாள் 10.06.2023 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 05.08.2023 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 09.10.2023 | |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | கு.வி.மு.ச.பிரிவு 294(3)ன் கீழான மனு எம்.பி.எண்.2/2026 உத்தரவு நாள் 29.01.2026 – அனுமதிக்கப்பட்டது. | |

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:14:24 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4<br>அ.சா.5<br>அ.சா.6<br>அ.சா.7 | 12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>20.01.2026<br>29.01.2026 | 12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>12.01.2026<br>20.01.2026<br>29.01.2026 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 04.02.2026 | | |
| 9. | எதிரிமீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | – இல்லை – | – இல்லை – | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 02.03.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 18.03.2026 | | |

இவ்வழக்கு 08.08.2023ம் தேதி சி.சி.எண்.54/2023 என்ற எண்ணில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, வழக்கு இறுதியாக 02.03.2026ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 304–Aன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஆகும்.

1. **சிவகிரி காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

22.05.2023ம் தேதி மாலை 16.15 மணிக்கு சிவகிரி காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட வெடிக்காரன்பாளையம் பிரிவு அருகில் சிவகிரி பச்சாக்கவுண்டன்வலசைச் சேர்ந்த தனலட்சுமி என்பவர் XL SUPER TN 33 BK 1569 என்ற வண்டியில் முத்தூர் – ஈரோடு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:14:30 +0530

செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றும், மேற்படி ரோட்டை கடந்து ரோட்டிற்கு கிழபுறமாக சென்று கொண்டிருந்தவர்மீது அதே ரோட்டில் பின்னால் TN 39 R 3555 என்ற பதிவெண் உள்ள ஆம்னி காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று தனலட்சுமி ஓட்டி சென்ற வண்டியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தி தனலட்சுமிக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 304–அன் கீழ் குற்றம்புரிந்துள்ளதாக சிவகிரி காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>வழக்கை புலன் கொண்டு எதிரியை அழைத்தல்</u>:**

மேற்படி இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் ஆய்வு செய்து இ.த.ச.பிரிவுகள் 279, 304–அன் கீழ் புலன் கொள்ளக் கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

3. **<u>எதிரியின் கோரிக்கை</u>**:

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு இ.த.ச.பிரிவுகள் 279, 304–அன் கீழான குற்றம் குறித்து எதிரியிடம் வினவியபோது குற்றத்தை எதிரி மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்காக உத்தரவிடப்பட்டது.

4. **<u>வழக்கு விசாரணை</u>**:

அரசு தரப்பில் குறிப்பிட்டிருந்த பட்டியல் சாட்சிகளில் பட்டியல் சாட்சிகள் 4, 5, 6, 9 10, 11 ஆகிய 6 நபர்கள் தவிர்த்து அ.சா.1 முதல் அ.சா.7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:14:34 +0530

5. <u>**அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**</u>

(I) **வழக்கின் புகார்தாரரான கஜேந்திரன் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில்** 22.05.2023ம் தேதி தனது அம்மா தங்கள் வீட்டில் இருந்து மேகரையான் தோட்டம், வெண்டிக்காரன்பாளையத்தில் உள்ள தங்கள் தோட்டத்திற்கு தனது தந்தைக்கு சொந்தமான TN 33 BX 1569 என்ற எண்ணுள்ள XL இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது மாலை 04.15 மணி சுமாருக்கு வெண்டிக்காரன்பாளையம், முத்தூர் – ஈரோடு ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், வெண்டிக்காரன் பிரிவில் திரும்பி கிழக்கு நோக்கி சென்று சாலையை பாதி கடந்த நிலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த TN 39 R 3555 என்ற எண்ணுள்ள ஆம்னி வேன் அதிவேகமாகவும், அலட்சியமாகவும் வந்து தனது அம்மா வண்டியில் மோதிவிட்டதாகவும், தனது அம்மாவிற்கு பின் தலையில் காயம் ஏற்பட்டு விட்டதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்த கார்த்திகேயன், ஆறுமுகம் ஆகிய இருவரும் தனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலம் கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், தனது அம்மாவை பரிசோதித்ததில் தனது அம்மா இறந்துவிட்டதாகவும், மாலை 05.50 மணி சுமாருக்கு பழனியில் இருந்த தனக்கு கார்த்திகேயன் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னதாகவும், தகவல் கேள்விப்பட்ட தான் கொடுமுடி அரசு மருத்துவனைக்கு வந்து தனது அம்மாவை பார்த்ததாகவும், தனது அம்மாவின் மீது மோதிய ஆம்னி வேனை ஓட்டி வந்த ஓட்டுநர் பெயர் முத்தூர் ரங்கப்பன் காடு அருகில் உள்ள சக்திவேல் என்று விசாரித்து தெரிந்துகொண்டதாகவும், தனது அம்மா விபத்தில் அடிபட்டது சம்பந்தமாக சிவகிரி காவல்நிலையத்தில் **அ.சா.ஆ.1 புகார்** அளித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(ii) அ.சா.2 ஆறுமுகம் தனது சாட்சியத்தில்** சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 22ம் தேதியன்று மாலை 04.00 மணி சுமாருக்கு வெடிக்காரம்பாளையத்தில் உள்ள விவசாய காட்டில் தான் இருந்தபோது ஒரு பெண்மணி TVS இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து வெடிக்காரம்பாளையம் பிரிவில் கிழக்கு நோக்கி திரும்பியபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த ஆம்னி வேன் இருசக்கர

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:14:39 +0530

வாகனத்தில் திரும்பி கொண்டிருந்த பெண்மணியின் மீது மோதி சத்தம் கேட்டு காட்டில் இருந்த தான் சென்று பார்த்ததாகவும், தான் சென்று பார்த்தபோது அந்த பெண்மணி மயங்கியநிலையில் இருந்ததாகவும், அவருக்கு இரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும், அவரை சாலையின் ஓரமாக தூக்கி வைத்ததாகவும், 108 ஆம்புலன்ஸ் மூலம் அந்த பெண்மணியை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு தானும் கார்த்தி என்பவரும் கொண்டு வந்து சிகிச்சையில் சேர்ந்ததாகவும், அந்த பெண்மணி இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(iii) அ.சா.3 கார்த்திகேயன் தனது சாட்சியத்தில்** 22.05.2023ம் தேதி மாலை 04.15 மணி சுமாருக்கு தான் வெடிக்காரன்பாளையம் பிரிவில் நின்று கொண்டிருந்தபோது தனலட்சுமி என்பவர் XL இருசக்கர வாகனத்தில் முத்தூரில் இருந்து ஈரோடு செல்லும் சாலையில் வந்து விவசாய காட்டிற்கு செல்லும்போது முத்தூர் சாலையில் இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னி வேன் தனலட்சுமி சென்ற XL இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டதாகவும், மோதியதில் தனலட்சுமி சுமார் 50 அடி தூரம் தள்ளி தூக்கி எறியப்பட்டதாகவும், அங்கு நின்று பேசிகொண்டிருந்த தானும், ஆறுமுகம் என்பவரும் சென்று பார்த்தபோது தனலட்சுமிக்கு தலையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், அவர் மயங்கிய நிலையில் இருந்தார் என்றும், அவரை தூக்கி சாலையின் ஓரமாக வைத்து விட்டு ஆறுமுகம் தண்ணீர் கொடுத்து முதலுதவி செய்ததாகவும், தனலட்சுமி தண்ணீரை குடிக்கவில்லை என்றும், பிறகு தான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து தனலட்சுமியை கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்ததாகவும், அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டாதாக சொன்னார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) **அ.சா.4 ஜெகநாதன் தனது சாட்சியத்தில்** 23.05.2023ம் தேதியன்று காலை 06.30 மணி சுமாருக்கு ஈரோடு – முத்தூர் சாலையில், வாய்க்கால்மேடு போகும் சாலையில் போலீசார் தனலட்சுமி என்பவர் இருசக்கர வாகனத்தில் தனது விவசாய நிலத்திற்கு சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த ஆம்னி வேன் மோதி விபத்து சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணைக்காக அழைத்தார்கள் என்றும், போலீசார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:14:43 +0530

வரைபடம் வரைந்தார்கள் என்றும், ஆம்னிவேன் வேகமாக வந்து மோதி தனலட்சுமி தூக்கி எறியபட்டதை தான் பார்த்தேன் என்று போலீசாரிடம் கூறினேன் என்றும், **பார்வைமஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2** தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(v) **அ.சா.5 பழனிசாமி தனது சாட்சியத்தில்** 23.05.2023ம் தேதியன்று காலை 08.00 மணி சுமாருக்கு ஈரோடு – முத்தூர் சாலையில், வெடிக்காரம்பாளையத்தில் சாலை விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், **பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) **அ.சா.6 தமிழ்செல்வி, காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 22.05.2023ம் தேதியன்று தான் சிவகிரி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, அன்று இரவு சுமார் 19.00 மணிக்கு சிவகிரி கொல்லங்கோவில் கிராமம், கந்தசாமிபாளையத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர் மகன் கஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.82/2023, இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் படி **அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை** பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(vii) **அ.சா.7 ஆனந்த், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில்** 22.05.2023ம் தேதியன்று சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.எஸ்.தமிழ்செல்வி பதிவு செய்து வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.82/2023 இ.த.ச.பிரிவுகள் 279, 304–A வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.5 பார்வைமகஜர்** மற்றும் **அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம்** தயார் செய்ததாகவும், மேலும் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் ஆறுமுகம், கார்த்திகேயன், ஜெகநாதன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கு முன்பு இறந்துபோன தனலட்சுமி என்பவரது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:14:48 +0530

பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து **அ.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்ததாகவும், இறந்துபோன தனலட்சுமி என்பவரின் பிரேதத்தை இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு சடலக்கூராய்வுக்கு கொடுமுடி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு பெண் தலைமை காவலர் 2059 திருமதி. ராஜாமணி என்பவர் மூலம் அனுப்பி வைத்ததாகவும், பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான கஜேந்திரன், திவாகரன், சுகுமார், கணேசமூர்த்தி, கார்த்திகேயன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் தயார் செய்ததாகவும், 13.06.2023ம் தேதி விபத்தில் எதிரி ஓட்டிவந்த வாகனமான TN 39 R 3555 என்ற எண்ணுள்ள மாருதி ஆம்னி காரையும், விபத்தில் இறந்துபோன தனலட்சுமி என்பவர் ஓட்டி வந்த TN 33 BK 1569 என்ற எண்ணுள்ள XL Super என்ற இருசக்கர வாகனத்தையும் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்ததாகவும், மேற்சொன்ன இரண்டு வாகனங்களையும் தணிக்கை செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவகுமார் என்பவரை விசாரணை செய்து வாகனங்களின் தணிக்கை சான்று பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், **TN 39 R 3555 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.8** என்றும், **TN 33 BK 1569 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று அ.சா.ஆ.9** என்றும், 03.07.2023ம் தேதி விபத்தில் இறந்துபோன தனலட்சுமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய கொடுமுடி அரசு மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் திரு.ஆதித்யவிஜயராகவன் என்பவரை விசாரித்து **அ.சா.ஆ.10 பிரேத பரிசோதனை சான்று** பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பிரேத பரிசோதனையின் போது வழிக்காவல் செய்த நிலைய பெண் தலைமைகாவலர் 2059 திருமதி.ராஜாமணி என்பவரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி.தமிழ்செல்வி என்பவரையும் விசாரித்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிமீது இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியமானது முடித்து வைக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:14:53 +0530

6. **<u>எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவல்:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் மேற்படி சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் மற்றும் குற்ற விபரங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி வழக்கை பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் கூறினார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. எதிரி இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றம்புரிந்துள்ளார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு இருப்பின் எதிரிக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை எவ்வளவு என்பதே இவ்வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி ஆகும்.

8. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் எதிரி குற்றம்புரிந்துள்ளார் என்பதை அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரியை இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என அரசு தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

9. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சம்பத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது குறுக்கு விசாரணையில் சத்தம் கேட்டுத்தான் சம்பவத்தை பார்த்ததாக கூறியுள்ளார்கள் என்றும், அரசு தரப்பில் எதிரி தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்கிற வகையில் சாட்சியமளிக்கவில்லை என்றும், எனவே எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:14:57 +0530

10. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. 22.05.2023ம் தேதி மாலை 16.15 மணிக்கு வெடிக்காரன்பாளையம் பிரிவு அருகில் சிவகிரி பச்சாக்கவுண்டன்வலசைச் சேர்ந்த தனலட்சுமி என்பவர் XL SUPER TN 33 BK 1569 என்ற வண்டியில் முத்தூர் – ஈரோடு செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றும், மேற்படி ரோட்டை கடந்து ரோட்டிற்கு கிழுபுறமாக சென்று கொண்டிருந்தவர்மீது அதே ரோட்டில் பின்னால் TN 39 R 3555 என்ற பதிவெண் உள்ள ஆம்னி காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று தனலட்சுமி ஓட்டி சென்ற வண்டியின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தி தனலட்சுமிக்கு இறப்பை ஏற்படுத்தினாரா என்பதை அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்க்கவேண்டியுள்ளது.

11. அ.சா.1 கேள்விநிலை சாட்சியம் ஆவார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது முதல் விசாரணையில் "சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 22ம் தேதியன்று மாலை 04.00 மணி சுமாருக்கு வெடிக்காரம்பாளையத்தில் உள்ள விவசாய காட்டில் தான் இருந்தபோது ஒரு பெண்மணி TVS இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து வெடிக்காரம்பாளையம் பிரிவில் கிழக்கு நோக்கி திரும்பிய போது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த ஆம்னி வேன் இருசக்கர வாகனத்தில் திரும்பி கொண்டிருந்த பெண்மணியின் மீது மோதி சத்தம் கேட்டு காட்டில் இருந்த தான் சென்று பார்த்ததாகவும், தான் சென்று பார்த்தபோது அந்த பெண்மணி மயங்கியநிலையில் இருந்தார்" என சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "தான் தோட்டத்திற்கு தண்ணீர் கட்டிக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான் என்றும், அப்போது திடீரென சத்தம் கேட்டு சென்று பார்த்தேன் என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2ன் சாட்சியத்தை பார்க்கும்போது அ.சா.2 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அ.சா.2 கேள்விநிலை சாட்சியம் என்றும் தெரிய வருகிறது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:15:02 +0530

12. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணையில் "கடந்த 22.05.2023ம் தேதி மாலை 04.15 மணி சுமாருக்கு தான் வெடிக்காரன்பாளையம் பிரிவில் நின்று கொண்டிருந்தபோது தனலட்சுமி என்பவர் XL இருசக்கர வாகனத்தில் முத்தூரில் இருந்து ஈரோடு செல்லும் சாலையில் வந்து விவசாய காட்டிற்கு செல்லும்போது முத்தூர் சாலையில் இருந்து ஈரோடு நோக்கி சென்ற ஆம்னி வேன் தனலட்சுமி சென்ற XL இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டதாகவும், மோதியதில் தனலட்சுமி சுமார் 50 அடி தூரம் தள்ளி தூக்கி எறியப்பட்டதாகவும், அங்கு நின்று பேசிகொண்டிருந்த தானும், ஆறுமுகம் என்பவரும் சென்று பார்த்தபோது தனலட்சுமிக்கு தலையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், அவர் மயங்கிய நிலையில் இருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "சத்தம் கேட்டு விபத்தில் சிக்கிய தனலட்சுமியை பார்க்க சென்று விட்டு பின்பு தான் தண்ணீர் எடுத்துச் சென்றோம் என்றால் சரிதான் என்றும், விபத்து நடந்த இடத்தில் ரத்த கரை மற்றும் வாகனத்தின் உடைந்த உதிரி பாகங்கள் கிடந்தது என்றால் சரிதான்" என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ஆறுமுகம் சத்தம் கேட்டு தான் பார்த்தோம் என கூறியுள்ளதால் அ.சா.3ம் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அ.சா.3ம் கேள்விநிலை சாட்சியம் என்பது தெரிய வருகிறது.

13. அ.சா.4 தனது முதல் விசாரணையில் "போலீசார் வரைபடம் வரைந்தார்கள் என்றும், தன்னிடம் விபத்தை நீங்கள் பார்த்தீர்களா என்று கேட்டார்கள் என்றும், ஆம்னிவேன் வேகமாக வந்து மோதி தனலட்சுமி தூக்கி எறியப்பட்டதை தான் பார்த்தேன் என்று போலீசாரிடம் கூறினேன் என்று சாட்சியமளித்துவிட்டு குறுக்கு விசாரணையில் "தான் போலீசாரிடம் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான் என்றும், தனக்கு சம்பவத்தை பற்றி நேரிடையாக தெரியாது என்றால் சரிதான் என முரண்பட்டு சாட்சியமளித்திருப்பதை வைத்து பார்க்கும்போது அ.சா.4ன் சாட்சியமும் நம்பத்தகுந்ததாக இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. அ.சா.7 புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில் "தான் வழக்கு கோப்பினை 23.05.2023ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சென்று

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:15:06 +0530

காலை 06.30 மணிக்கு சம்பவ இடமான வெடிக்காரன்பாளையம் பிரிவு அருகே சென்று சாட்சிகள் ஜெகநாதன் மற்றும் பழனிசாமி ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்" என சாட்சியமளித்துள்ளார். ஆனால் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் தாங்கள் சம்பவ இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டியதாக குறிப்பிட்டு சாட்சியமளிக்காததால் சம்பவ இடத்தை யார் அ.சா.7 புலன் விசாரணை அதிகாரிக்கு அடையாளம் காட்டினார்கள் என அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இவ்வழக்கில் விபத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்காததாலும், பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களில் சம்பவ இடத்தை புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7க்கு யார் அடையாளம் காட்டினார்கள் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்காததாலும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றங்களை பொருத்து ஆராயும்போது அரசு தரப்பில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி கவனக்குறைவாக ஓட்டி வந்தார் என்றோ, மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவேண்டும். அரசு தரப்பு சாட்சிகள் எதிரி தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவம், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளிக்காததாலும், பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 ஆகியோர்களில் சம்பவ இடத்தை புலன் விசாரணைஅதிகாரியான அ.சா.7க்கு யார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.18 14:15:11 +0530

அடையாளம் காட்டினார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு சாட்சியமளிக்காததாலும், இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–A ன் கீழ் எதிரி தகாத துணிச்சல் மற்றும் கவனமற்று ஓட்டியதாக கூறப்படும் குற்றச்சாட்டை நிரூபணம் செய்யவில்லை என்ற நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது உசிதமானது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

17. எனவே எதிரிமீதான இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 279, 304–Aன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்று முடிவு செய்து எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aன் கீழ் குற்றவாளி இல்லை என எதிரியை குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்படவில்லை.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் புதன்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:15:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.கஜேந்திரன் | - புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.ஆறுமுகம் | |
| அ.சா.3 | திரு.கார்த்திகேயன் | |
| அ.சா.4 | திரு.ஜெகநாதன் | |
| அ.சா.5 | திரு.பழனிசாமி | |
| அ.சா.6 | திருமதி.எஸ்.தமிழ்செல்வி | - காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.7 | திரு.ஆனந்த் | - காவல் ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.05.2023 | புகார் |
| அ.சா.ஆ.2 | 22.05.2023 | பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.3 | 22.05.2023 | பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.4 | 22.05.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 22.05.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 22.05.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 23.05.2023 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 13.06.2023 | TN 39 R 3555 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |
| அ.சா.ஆ.9 | 13.06.2023 | TN 33 BK 1569 என்ற வாகனத்திற்கான தணிக்கை சான்று |
| அ.சா.ஆ.10 | 23.05.2023 | பிரேத பரிசோதனை சான்று |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:-** - இல்லை -

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:-</u> - இல்லை -**

**<u>குறிப்பு</u>**

1. வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:15:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>**C.C.No.54/2023**</u>

| **S.No** | FORM ANNEXURE UNDER RULE 106 OF CRIMINAL RULE OF PRACTICE<br>**Description of Accused** | |
|---|---|---|
| 1 | Name of the Police Station and the Crime Number of the Offence | The Inspector of Police, Sivagiri Police Station, Crime No.82/2023 Under Section 279, 304-A of IPC |
| 2 | Name | Sakthivel |
| 3 | Father's Name | Muthusamy |
| 4 | Occupation | Driver – Lorry (Truck) |
| 5 | Residence | 53(1) Rasathavalasu, Muthur Post, Kangeyam Taluk, Tiruppur Dt. |
| 6 | Age | 55/2023 |
| 7 | Date of Occurrence | 22.05.2023 |
| 8 | Date of Complaint | 22.05.2023 |
| 9 | Date of Apprehension | 10.06.2023 |
| 10 | Date of Release on bail | Station Bail on 10.06.2023 |
| 11 | Date of Commitment | -- |
| 12 | Date of Commencement of trial | 04.12.2023 |
| 13 | Date of Closure of trial | 04.02.2026 |
| 14 | Date of Sentence or Order | 18.03.2026 |
| 15 | Date of Service of copy of Judgment or finding on Accused | Acquitted |
| 16 | Explanation of delay | No Delay |

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.18 14:15:26 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கொடுமுடி.**